மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம்

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருநெல்வேலி

முன்னிலை: திரு. அ. ராபின்சன் ஜார்ஜ், பி.எஸ்சி. எல்.எல்.எம்., எம்.எல்.,

3-வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, திருநெல்வேலி

2026 ம் வருடம் ஜனவரி திங்கள் 27-ம் நாள் திங்கள்கிழமை

மோட்டார் விபத்து உரிமைகோரல் அசல் மனு எண். 1862/2019

(CNR.No. TNTL01-013189-2019)

1. அழகுசெல்வி, க/பெ. (லேட்) முருகன், வயது 45, கதவு எண்.18B, நடுத்தெரு, வடக்குபுளியம்பட்டி, மேலநரிக்குடி, நரிக்குடி, சங்கரன்கோவில், திருநெல்வேலி-627953.

2. மனோஜ்குமார், த/பெ. (லேட்) முருகன், வயது 21, தெற்குதெருவில், வடக்கு புளியம்பட்டி, வன்னிக்கோனேந்தல், திருநெல்வேலி - 627 951,

... மனுதாரர்கள்

/எதிர்/

1. சைமன்விக்டர், த/பெ.அருள்சாமி, கதவு எண்.751, புதிய எண் - 741, பங்களாதெரு, சேர்ந்தமரம் - அஞ்சல், சங்கரன்கோவில், திருநெல்வேலி - 627 756.

2. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கதவு எண்.312, ராஜபாளையம் மெயின்ரோடு, சங்கரன்கோவில் தாலுகா, திருநெல்வேலி - 627 756. அதன் கிளை மேலாளர் மூலம்.

3. மகாராஜன், த/பெ. (லேட்) முருகன், வயது -24, நடுத்தெரு, வடக்குபுளியம்பட்டி, மேலநரிக்குடி, நரிக்குடி, சங்கரன்கோவில், திருநெல்வேலி-627953.

... எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது 22.01.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ம. அமலன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S.கணேசன்

அவர்கள் ஆஜராகியும், 1, 3 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத நிலையில் ஒருதரப்பு நிலையர் ஆக்கப்பட்டும் இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனுவில் முன்னிடப்பட்டுள்ள வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

ஆணையுரை

1. இவ்வழக்கானது மோட்டார் வாகன விபத்தில் முருகன் என்பவர் இறந்ததற்கு இழப்பீடாக ரூ.25,00,000/-ம் கோரி மனுதாரர்களால் மோட்டர் வாகன சட்டம், 1988 பிரிவு 166 & 140 விதி 59/1988-ன் படி 18.09.2019 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**:-

1வது மனுதாரர் இறந்துபோன முருகனின் மனைவி. 2-வது மனுதாரர் இறந்துபோன முருகனின் மகன். 3-வது எதிர்மனுதாரர் இறந்துபோன முருகனின் மகன். கடந்த 04.03.2019 ம் தேதி மதியம் சுமார் 03.40 மணியளவில் விபத்தில் இறந்து போன முருகன் என்பவர் TN 23 L 9534 என்ற எண்ணுள்ள மோட்டார் சைக்கிளில் திருநெல்வேலி to சங்கரன்கோவில் மெயின்ரோடு, வன்னிகோனேந்தல் பெதஸ்தா குட்நியூஸ்மிசன்ச்ரச் அருகே, சாலையின் இடதுஓரமாக, சாலைவிதிகளை கடைபிடித்து, தெற்கே இருந்து வடக்காக சென்று கொண்டிருந்த போது, மேற்படி சாலையில் எதிரே வந்த TN 72 P

9040 என்ற எண்ணுள்ள வாகனத்தை அதிக வேகமாகவும், கவனக்குறைவாகவும், ஓட்டி வந்து விபத்தில் இறந்த முருகன் ஓட்டிசென்று கொண்டிருந்த மோட்டார்சைக்கிள் மீது மோதி மேற்படி விபத்து நடைபெற்றது. மேற்படி விபத்தில் முருகன் என்பவருக்கு உடலில் பல தரப்பட்ட காயங்களினால் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். மேற்படி விபத்திற்க்கு, விபத்தில் இறந்து போன முருகன் என்பவர் எந்த வகையிலும் பொறுப்பாக மாட்டார். மேற்படி விபத்திற்கு 1-வது மனுதாரரின் அதிவேகமும், கவனக்குறைவும் தான் முழு காரணம். மேற்படி விபத்து குறித்து அழகுசெல்வி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் 1வது எதிர்மனுதாரரின் மீது தேவர்குளம், காவல்நிலையக் குற்ற எண். 28/2019 இ.த.ச.பிரிவுகள் 279 & 304 A ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு திருநெல்வேலி குற்றவியல் நீதத்துறை நடுவர் நீதிமன்றம்-3 முன்பு நிலுவையில் இருந்து வருகிறது. 1ம் மனுதாரர் தனது கணவரின் அன்பையும், ஆதரவையும், வாழ்க்கை வழிகாட்டியையும், இல்லற வாழ்க்கையையும் இழந்து விட்டார். 2ம் மனுதாரர் மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் வரை தனது தந்தையையும், அன்பையும், ஆதரவையும், வாழ்க்கை வழிகாட்டியையும், இழந்து விட்டார்கள். மேற்படி விபத்தின் மூலம் குடும்பத்தில் பொருள்ஈட்டும்திறன் கொண்ட நபரை இழந்து விட்டார்கள். எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீடாக ரூ.84,80,000/-

கொடுக்க சட்டப்படி கடமைப்பட்டிருந்தாலும் மொத்தமாக கிடைக்கும்பட்சத்தில் ரூ.25,00,000/- கிடைத்தால் போதும், 3-ம் எதிர்மனுதாரர் விபத்தில் இறந்து போன முருகன் என்பவரின் மகன் ஆவார். மேற்படி 3ம் எதிர்மனுதாரர், மனதாரர்களிடம் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்ய விரும்பாத காரணத்தினால் மேற்படி பிரதான இழப்பீட்டு மனுவில் 3ம் எதிர்மனுதாராக சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து சமயத்தில் 1வது எதிர்மனுதாரர் வாகன பதிவு எண் TN 72 P 9040 ஆகும். 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2வது எதிர்மனுதாரரின் காப்பிறுதி நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிர்மனுதாரர்கள் கூட்டாகவும், தனித் தனியாகவும் இழப்பீடு கொடுக்க சட்டப்படி கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மேற்படி முருகனின் இறப்பின் காரணமாக மனுதாரர்களுக்கு இழப்பீடாக ரூ.84,80,000/- கிடைக்கத்தக்கதாக கணக்கிடப்பட்டாலும், மனுதாரர்கள் தங்களுடைய தொகை ரூ.25,00,000/- என குறைத்து கோரியுள்ளார்கள். மனுப்படி உத்தரவாக வேண்டும்.

3. **<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>:-**

மனுதாரர்களின் கோரிக்கை சட்டப்படி நிலைக்கதக்கது இல்லை. மனுதாரர்கள் இறந்து போனவரின் சட்டபடியான வாரிசுகள் என்பதையும் இறந்த போன நபரை சார்ந்து இருந்தார்கள் என்பதையும் மனுதாரர்கள் தான் நிருபிக்கவேண்டும். விபத்தில் இறந்து போனவர்க்கு 48 வயது

என்பதும், அவர் விவசாயம் தொழிலை செய்து மாதம் ரூ.15,000/- சம்பாதித்து வந்தார் என்பதும் உண்மை இல்லை. 1ம் எதிர்மனுதாரருடைய TN 72 P 9040 வாகனம் சாலையில் இயக்குவதற்கு தகுதியானது இல்லை. அந்த வாகனத்தின் தகுதி சான்று 03.05.2017 தேதியில் முடிவு அடைந்து விட்டது. இது காப்பீட்டு விதி மீறல் ஆகும். எனவே, இந்த எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை. TN 23 L 9534 வாகனத்தின் உரிமையாளரும் காப்பீடு நிறுவனமும் இந்த மனுவிற்கு அவசிய தரப்பினர். எனவே இந்த மனுவிற்கு தேவையான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை. கடந்த 04.03.2019 அன்று மாலை 03.40 மணிக்கு 1ம் எதிர்மனுதாரருடைய TN 72 P 9040 வாகனத்தை அதன் ஓட்டுநர் திருநெல்வேலி to சங்கரன்கோவில் மெயின் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக சாதாரண வேகத்தில் சாலை விதிகளை கடைபிடித்து ஒட்டி வரும்போது இறந்து போனவர் TN 23 L 9534 என்ற மோட்டார் சைக்கிளை தெற்கிலிருந்து வடக்காக ஒட்டி வந்து வாகனம் வருவதை கவனிக்காமல் திடிரென சாலையின் குறுக்கே மேற்கு பக்கத்திலிருந்து கிழக்கு பக்கமாக சென்று 1ம் எதிர்மனுதாரருடைய வாகனத்தின் முன் வலது பக்கத்தில் மோதி கிழே விழுந்து விபத்து ஏற்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் இந்த விபத்திற்கு காரணம் இல்லை. இறந்து போனவரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவு தான் விபத்திற்கு முழு காரணம் ஆகும். எனவே, இந்த எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை. மனுதாரர்கள் கோரியுள்ள ரூ.25,00,000/- இழப்பீடு தொகை மனுதாரர்களுக்கு கிடைக்க கூடியது இல்லை. மனுதாரர்கள் கோரியுள்ள 7.5% வட்டியும் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டியது இல்லை. எனவே இந்த மனு

தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. மனு எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த இத்தீர்ப்பாயம் கீழ்க்கண்ட தீர்வுக்குரிய பிரச்சினைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது.

1. இந்த விபத்தானது யாருடைய கவனக் குறைவால் ஏற்பட்டுள்ளது?

2. எதிர்மனுதாரர்கள், மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்களா?

3. மனுதாரர்களுக்கு கிடைக்கக் கூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

5. மனுதாரர்கள் தரப்பில் இறந்துபோன முருகன் என்பவரின் மனைவியான 1-ம் மனுதாரர் அழகு செல்வி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. இரு தரப்பினர்களின் சம்மதத்தின் பேரில் மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தக நகல்கள் ம.சா.ஆ.8 மற்றும் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **பிரச்சினை:-1**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

மனுதாரர் தரப்பில் கடந்த 04.03.2019 ம் தேதி மதியம் சுமார் 03.40 மணியளவில் விபத்தில் இறந்து போன 1 ம் மனுதாரரின் கணவரும் 2 ம் மனுதாரர் மற்றும் 3 ம் எதிர்மனுதாரின் தகப்பனாரும் ஆன முருகன் என்பவர் TN 23 L 9534 என்ற எண்ணுள்ள மோட்டார் சைக்கிளில் திருநெல்வேலி to சங்கரன்கோவில் மெயின்ரோடு, வன்னிகோனேந்தல் பெதஸ்தா குட்நியூஸ்மிசன்ச்ரச் அருகே, சாலையின் இடதுஓரமாக, சாலைவிதிகளை கடைபிடித்து, தெற்கே இருந்து வடக்காக சென்று கொண்டிருந்த போது, மேற்படி சாலையில் எதிரே வந்த TN 72 P 9040 என்ற எண்ணுள்ள வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிக வேகமாகவும், கவனக்குறைவாகவும், ஓட்டி வந்து விபத்தில் இறந்த முருகன் ஒட்டிசென்று கொண்டிருந்த மோட்டார்சைக்கிள் மீது மோதி விபத்து நடைபெற்றது என்றும், மேற்படி விபத்தில் முருகன் என்பவருக்கு உடலில் பல தரப்பட்ட காயங்களினால் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், மேற்படி விபத்திற்க்கு, விபத்தில் இறந்து போன முருகன் என்பவர் எந்த வகையிலும் பொறுப்பாக மாட்டார் என்றும், மேற்படி விபத்திற்கு 1-வது எதிர்மனுதாரரின் அதிவேகமும், கவனக்குறைவும் தான் முழு காரணம் என்றும், மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

7. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பிலும் விபத்து நடந்ததும் விபத்தில் 1 ம் மனுதாரரின் கணவரான முருகன் என்பவர் இறந்துள்ளார் என்பதும் மறுக்கபடவில்லை. ஆனால், விபத்து 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஒட்டி சென்ற ஓட்டுநரின்

கவனகுறைவினால் நடைபெறவில்லை என்றும், விபத்தில் இறந்து போன முருகன் என்பவர் தான் வாகனம் வருவதை கவனிக்காமல் வாகனத்தை திடீரென்று சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு பக்கமாக சாலையின் குறுக்காக கடந்து சென்று 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற வாகனத்தின் முன் பக்கத்தில் மோதி கிழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்றும், இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்றும், எதிருரை தாக்கல் செய்து கட்சி செய்யப்படுகிறது.

8. இந்த நிலையில் இந்த விபத்து யாருடைய கவனக்குறைவினால் நடந்துள்ளது என்பதை சாட்சியங்கள் மற்றும் சான்றாவனங்கள் வாயிலாக பரிசீலனை செய்து பார்க்கும்போது இந்த விபத்து சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ள இறந்து போன முருகன் என்பவரின் மனைவி அழகு செல்வி, 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார். இந்த விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் தேவர்குளம் காவல்நிலையத்தில் கொடுத்திருந்த புகாரின் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்து பார்க்கும் போது இந்த நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. விபத்து 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் கவனக்குறைவினால்

நடைபெறவில்லை என்று 2ம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்துள்ள போதிலும் விபத்து தன்னுடைய கவனக்குறைவினால் நடைபெறவில்லை என்று 1ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்து எவ்வித கட்சியும் செய்யவில்லை. விபத்து 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் கவனக்குறைவினால் நடைபெறவில்லை என்பதையும் நிரூபிக்கும் விதமாக 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இந்த நிலையில் மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை பரிசீலனை செய்து பார்க்கும் போது இந்த விபத்து 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டி சென்ற ஓட்டுநரின் கவனக்குறைவினால் தான் நடைபெற்றது என்று மனுதாரர்கள் தரப்பில் கூறப்படுவது தகுந்த சாட்சியம் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் கவனக்குறைவு தான் காரணம் என்றும், இந்த நீதிமன்றம் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

9. **பிரச்சினை எண்.2:-**

விபத்து சமயத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட TN 72 P 9040 என்ற எண்ணுள்ள வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் இருந்ததாக மனுதாரர் தரப்பில் கூறப்படுகிறது. மேற்படி விபரம் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாக மறுக்கப்படவில்லை. ஆனால் விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம்

சாலையில் ஓட்டுவதற்கு தகுதி சான்றும் இல்லை என்றும், அந்த வாகனத்தின் தகுதி சான்று 03.07.2017 தேதியில் முடிந்து விட்டது என்றும், இது பாலிசி விதி மீறல் என்றும், எனவே 2 ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றும் கட்சி செய்யப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரர் விபத்து சமயத்தில் பாலிசி விதி மீறல் செய்துள்ளார் என்பதை நிரூபிக்கும் விதமாக 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்பட்டு தகுந்த சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டு நிருபிக்கபடவில்லை. இதனை பரீசிலனை செய்து பார்க்கும் போது 1ம் எதிர்மனுதாரர் பாலிசி விதி மீறல் செய்துள்ளார் என்று, 2 ம் எதிர்மனுதாரர் குறிப்பிடுவது ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லை. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 2 ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு உர்சிதத்தில் இருந்துள்ள நிறையில் விபத்து 1 ம் எதிர்மனுதாரர் வாகத்தை ஓட்டி வந்த ஓட்டுநரின் கவனக்குறைவினால் நடந்துள்ளதால் 1 ம் எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2 ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் 1ம் எதிர்மனுதாரருக்காக மனுதாரர்க்கு இழப்பீடு கொடுக்க கடமைபட்டுள்ளவர்கள் என்று இந்த நீதிமன்றம் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

10. **<u>பிரச்சினை எண்.3</u>**:-

விபத்து சமயத்தில் இறந்துபோன முருகன் என்பவருக்கு வயது.48

என்றும், அவர் விவசாயம் வேலை செய்து மாதம் ரூ.15,000/-ம் சம்பளம் பெற்று வந்தார் என்றும், முருகனின் திடீர் மரணத்தினால் மனுதாரர்கள் குடும்பத்திற்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், 1ம் மனுதாரர் தனது கணவரின் அன்பு மற்றும் பாசத்தையும், 2ம் மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் தனது தந்தையின் அன்பு மற்றும் பாசத்தையம் இழந்து விட்டனர் என்றும், எனவே, மேற்படி முருகனின் இறப்பின் காரணமாக மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகையாக ரூ.25,00,000/- வழங்க உத்தரவிட வேண்டுமென்றும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இறந்துபோன முருகன் சுயமாக விவசாயம் வேலை செய்து மாதம் ரூ.15,000/-க்கு குறையாமல் சம்பளம் பெற்று வந்தார் என்பதும் மனுதாரர்கள் தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை. எனவே, இறந்துபோன முருகன் என்பவரின் மாத ஊதியத்தை உத்தேச (Notional income) ஊதியமாகத்தான் எடுத்துக்கொள்ளலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. இந்த வகையில் இறந்துபோன முருகன் என்பவருடைய உத்தேச மாத வருமானமாக எவ்வளவு எடுத்துக்கொள்ளலாம் என்பதை பரிசீலனை செய்து பார்க்கும்போது மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள **2022(1) TNMAC 588** ***2019(1) TAMAC 54 D.B. In the High Court of Madras Andal and two others /Vs/ Avinav Kannan and another*** என்ற முன் தீர்ப்பில் வழங்கியுள்ள வழிகாட்டுதல் அடிப்படையிலும் 2019-ம்

ஆண்டு பணவீக்கத்தின் அடிப்படையிலும், இறந்துபோன முருகன் என்பவர் சுயமாக விவசாயம் வேலை பார்த்து வந்தார் என்று கூறப்படுவதையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது, இறந்துபோன முருகன் என்பவருடைய உத்தேச மாத வருமானமாக ரூ.12,000/- என்று எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

11. விபத்தில் இறந்துபோன முருகன் என்பவருக்கு வயது 48 என்று மனுதாரர்கள் தரப்பில் கூறப்படுகிறது. ஆனால் அதை நிரூபிக்கும் விதமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆனால் இறந்துபோன முருகன் என்பவருடைய பிரேத பரிசோதனை அறிக்கை நகல் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.2 ஆகவும், அவரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும் போது இறந்துபோன முருகன் என்பவருக்கு 48 வயது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இறப்பு சான்றிதழில் முருகனின் வயது 48 என்று குறிப்பிடப்பிடப்பட்டுள்ளதையும் இந்த நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறது. இறந்துபோன நபரின் வயது 48 ஆக உள்ள நிலையில் இறந்துபோன நபர் நிரந்தர வருமானம் எதுவும் பெறும் தொழில் செய்து வராத நிலையிலும், மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள ***2017(2) TNMAC 609 SC National Insurance Co.Ltd., /Vs/ Pranay Sethi and others*** என்ற முன்தீர்ப்பு வழக்கில் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதல்படி மாத

வருமனத்துடன் எதிர்கால வாய்ப்பு வளத்திற்காக 25% மாத வருமானத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இறந்துபோன முருகன் என்பவருடைய மாத வருமானத்தில் 25% ஆக ரூ.12,000/- x 25% = 3,000/- வருகிறது. ஆக மொத்தம் இறந்துபோன நபரின் மாத வருமானமாக ரூ.12,000 + 3,000 = ரூ.15,000/- என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. அதன் அடிப்படையில் இறந்துபோன முருகன் என்பவரின் ஆண்டு வருமானம் ரூ.15,000/- x 12 = ரூ. 1,80,000/- வருகிறது. இறந்துபோன முருகன் என்பவர் இறந்த சமயத்தில் அவரைச் சார்ந்தவர்கள் 1, 2 மனுதாரர்கள் மற்றும் 3 வது எதிர்மனுதாரர் இருந்துள்ளார்கள் என்பது மனு மற்றும் ம.சா.1 சாட்சியம் மற்றும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாரிசுசான்றிதழ் ம.சா.ஆ.3 ஆவணம் ஆகியவைகளை பரிசீலனை செய்து பார்க்கும் போதும், இந்த நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. இறந்துபோன முருகன் என்பவரை சார்ந்தவர்களான 3 நபர்கள் இருந்துள்ள நிலையில் **மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம்** ***2009(2) TN MAC 1 (SC) Sarla Verma and others /Vs/ Delhi Transport Coporation and another*** வழக்கில் வழங்கியுள்ள வழிகாட்டுதல்படி அவருடைய தனிப்பட்ட செலவினங்களுக்காக 1/3 தொகையான ரூ.60,000/-ஐ கழித்து போக ஆண்டு வருமானம் ரூ.1,20,000/- வருகிறது. இறந்துபோன முருகன் என்பவர் இறந்த சமயத்தில் அவருக்கு வயது 48 ஆக உள்ள நிலையில் மாண்புமிகு இந்திய

உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள ***2009(2) TN MAC 1 (SC) Sarla Verma and others /Vs/ Delhi Transport Coporation and another*** என்ற முன்தீர்ப்புரை வழக்கின் வழிகாட்டுதல்படி பெருக்கல் குறியீட்டு எண்.13 பொருந்தக் கூடியதாகும். அதன் அடிப்படையில் மனுதாரர்களுக்கு ரூ.1,20,000 x 13 = ரூ.15,60,000/- இழப்பீடாக கிடைக்கக் கூடியது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், மனுதாரர்களுக்கு மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் பிரணாயி சேத்தி வழக்கில் வழங்கியுள்ள வழிகாட்டுதல் அடிப்படையில் உடமை இழப்பீடாக ரூ.15,000/-மும், ஈம கிரியை செலவாக ரூ.15,000/-மும் கிடைக்கக்கூடியதாகும். மேலும், மனுதாரர்கள் இறந்துபோன நபரின் கணவர் மற்றும் பெற்றோர் என்பதால் 1, 2 மனுதாரர் மற்றும் 3 ம் எதிர்மனுதாரர்களுக்கு தலா ரூ.40,000/- வீதம் ரூ.1,20,000/- Loss of Consortium ஆக கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆக மொத்தம் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ. 15,60,000 + 30,000 + 1,20,000/- = ரூ.17,10,000/- கிடைக்கக்கூடியது என்றும் இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12. **முடிவாக**

1. இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

2. மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டு தொகை ரூ.17,10,000/- ஐ 1 மற்றும் 2-ம் எதிர்மனுதாரர்கள் செலுத்த வேண்டுமென்றும், மேற்படி தொகையை மனு தாக்கல் செய்த 18.09.2019 தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரையிலும் ஆண்டுக்கு

7.5% வட்டியும் (மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த நாட்கள் நீங்கலாக) மற்றும் மனுவின் செலவுத் தொகையும் சேர்த்து வழங்க வேண்டுமென்றும், மேற்படி தொகையில் 1வது மனுதாரருக்கு ரூ.12,10,000/-மும், 2-வது மனுதாரருக்கு ரூ.2,50,000/-மும், 3-வது எதிர்மனுதாரருக்கு ரூ.2,50,000/-மும், மற்றும் அதற்குரிய விகிதாச்சார வட்டியும் கிடைக்கக்கூடியது என்றும், மாண்பு மிகு உச்சநீதிமன்றம் PARMINDER SINGH VS HONEY GOYAL AND OTHERS (S.L.P.No. (c) No.4484 OF 2020) Dated 18-03-2025-ல் வழங்கியுள்ள முன்தீர்ப்பின் படி மேற்படி தொகைகளை இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் 1, 2 மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள கீழ்கண்ட வங்கியின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட வேண்டுமென்றும், 3 வது எதிர்மனுதாரர் அவரது வங்கி கணக்கு புத்தகத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத நிலையில், 1, 2 எதிர்மனுதாரர்கள் 3 வது எதிர்மனுதாரரின் வங்கி கணக்கு நகலை நேரடியாக பெற்று 3 வது எதிர்மனுதாரர் வங்கி கணக்கில் செலுத்தப்பட வேண்டுமென்றும், உத்தரவிடப்படுகிறது.

Claimant Name	**Bank and Account No.**	**IFSC Code No.**
Alaguselvi	Indian Overseas Bank, (1/66), District Court, Tirunelveli, Court Building, Tirunelveli. Account No. 176601000021233.	IOBA0001766 MICR Code:627020012
Manojkumar	State Bank of India, Mela Ilanthaikulam	SBIN0008464

	Account No. 44010636876.	MICR Code:627002014

3. அவ்வாறு தொகை செலுத்திய பின்னர் 1 மற்றும் 2-ம் எதிர்மனுதாரர்கள் வங்கி அறிவுறுத்தல் நகல் (Copy of Bank Advice) உடனே கடிதம் மூலம் இத்தீர்ப்பாயத்திற்கும் அதன் மற்றொரு நகலை மனுதாரர்கள் அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

4. மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் ரூ.24,100/- என நிர்ணயிக்கப்படுகிறது. 1 மற்றும் 2-ம் எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற கட்டணம், வழக்கறிஞர் கட்டணம், செலவுத் தொகை ஆகியவற்றை மனுதாரர்களுக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.

5. மனுவின் மனுதாரர்கள், நீதிமன்ற கட்டணம் ரூ.375/- செலுத்திவிட்டு பாக்கி நீதிமன்றக் கட்டணத்தை செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க தமிழ்நாடு மோட்டார் வாகன சட்ட விதி 24(3)-ன் கீழ் தனியாக விண்ணப்பித்துள்ளார். நீதிமன்ற கட்டணம் ரூ.16,475/- என நிர்ணயிக்கப் படுகிறது.

6. மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய எஞ்சிய நீதிமன்ற கட்டணம் ரூ.16,100-ஐ மனுதாரர்கள் தீர்ப்புத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்தி வைக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

மனுதாரர்கள் பாக்கி நீதிமன்ற கட்டணத்தை செலுத்தினால் தவிர, அவர் இழப்பீட்டு தொகை பெறுவதற்கு உரிமை உடையவர் ஆகார்.

7. நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ஆகியவற்றை உள்ளடக்கிய ரூ.40,575/- செலவை 1மற்றும் 2-ம் எதிர்மனுதாரர்கள் ஏற்க வேண்டும்.

<u>மனுதாரர்கள் தரப்பு செலவு விபரம்</u>

1	முத்திரை கட்டணம்	ரூ. 375
2	வக்காலத்தில் வில்லை	ரூ. 10
3	கட்டளைபடி	ரூ. 24
4	சான்றாவணத்தில் வில்லை	ரூ. 45
மொத்தம்		**ரூ. 454**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்தில் எழுதப்பட்டு, பின் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27-ம் நாள் ஆகிய இன்று இந்த ஆணையுரை அவையறிய பகரப்பட்டது.

A ROBINSON GEORGE
27-01-2026
Digitally signed by A ROBINSON GEORGE
Date: 2026.01.27 17:48:27 +0530

மோட்டார் வாகன விபத்துக்குள் கோரூரிமை தீர்ப்பாயர்,
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி
திருநெல்வேலி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சியம்</u>:-

ம.சா.1 அழகுசெல்வி

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>:-

ம.சா.ஆ.1 04.03.2019 முதல் தகவல் அறிக்கை நகல்

ம.சா.ஆ.2	05.03.2019	பிரேத பரிசோதனை அறிக்கை நகல்
ம.சா.ஆ.3	19.08.2019	வாரிசு சான்றிதழ் அசல்
ம.சா.ஆ.4	03-07-2023	முருகனின் இறப்பு சான்றிதழ் அசல்
ம.சா.ஆ.5	-------------	1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல்
ம.சா.ஆ.6	-------------	1 ம் மனுதாரரர் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.7	----------	2 ம் மனுதாரரர் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.8	----------	1 வது மனுதாரரின் வங்கி பாஸ்புத்தகம் நகல்
ம.சா.ஆ.9	----------	2 வது மனுதாரரின் வங்கி பாஸ்புத்தகம் நகல்

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :- இல்லை

A ROBINSON GEORGE

27-01-2026
Digitally signed by A ROBINSON GEORGE
Date: 2026.01.27 17:48:16 +0530

மோட்டார் வாகன விபத்துக்குள் கோருரிமை தீர்ப்பாயர்,

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருநெல்வேலி.

மோட்டார் வாகன விபத்துக்கள்
கோருரிமை தீர்ப்பாயம்
3 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
திருநெல்வேலி
எம்.சி.ஓ.பி.எண். 1862/2019
நாள் - 27-01-2026
வரைவு/சீரான தீர்வம்